IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

CC. 1262/2025 Date : 25.05.2026 P.W.2 / LW. 5

பெயர்	இளந்திரையன்	ஆதார்எண்	
தந்தை பெயர்	பழனிவேல்	தொழில்	தனிப்பிரிவு காவலர் – சங்கராபுரம் (Special Wing)
கிராமம்	சங்கராபுரம்	வயது	40
2 முதல் 4 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.			

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

முதல் விசாரணை

நான் சங்கராபுரம் காவல் நிலையத்தில் தனிப்பிரிவு தலைமை காவலராக பணி புரிகிறேன். சம்பவ காலத்தில் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்த போது 25.05.2018 ம் தேதி நான் அலுவலக பணியில் இருந்தபோது உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலின் பேரில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கண்ணன் த/பெ சின்னதம்பி என்பவரிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று மேற்படி புகார் வாக்குமூலத்தில் மனு ரசீது எண். 87/2018 வழங்கி பின் மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். புகார்தாரர் கண்ணன் அளித்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. மருத்துவமனையில் இருந்து எனக்கு எப்போது தகவல் கிடைத்தது என்றால் 25.02.2018 ம் தேதியில் தகவல் கிடைத்தது. அன்றைய தினமே நான் மருத்துவமனைக்கு சென்று புகார் வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். 25.02.2018 ம் தேதியே புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் சி.எஸ் . ஆர் பதிவு செய்து மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் என்றால் சரிதான்.

2. உதவி ஆய்வாளர் என்னை 25.02.2018 ம் தேதியிலேயே விசாரித்து வாக்குமூலம் பெற்றுவிட்டார் என்றால் இல்லை, 27.02.2018 ம் தேதியில் விசாரித்து வாக்குமூலம் பெற்றார். நான் சி.எஸ்.ஆர் யை பதிவு செய்யவில்லை என்றாலும் உதவி ஆய்வாளர் என்னை 27.02.2018 ம் தேதியிலேயே விசாரிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Typed by Typist – E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.25 19:19:41 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

CC. 1262/2025 Date : 25.05.2026 P.W.1 / LW. 4

பெயர்	பிரகாஷ்	ஆதார்எண்	
தந்தை பெயர்	மணி	தொழில்	எலக்ட்ரிஷியன்
கிராமம்	எலவனாசூர்கோட்டை	வயது	30
2 முதல் 4 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.			

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

முதல் விசாரணை

நான் எலவனாசூர்கோட்டையில் வசித்து எலக்ட்ரிஷியன் வேலை செய்து வருகிறேன். ப.சா.1,2 யை தெரியும் அவர்கள் தற்சமயம் உயிருடன் இல்லை. ப.சா.1 எனது சித்தப்பா, ப.சா.2 எனது பாட்டி. ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் எனது மாமா செந்தில் கையொப்பம் செய்தார். 8 வருடங்களுக்கு முன்பாக நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது பேலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். **பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தபோது 27.02.2018 அன்று காலை 9.00 மணிக்கு எ.கோட்டை காவல்நிலையத்தார் காவல்நிலைய குற்ற எண்.55/2018 வழக்கு சம்மந்தமாக சம்பவஇடத்திற்கு வந்து சம்பவஇடத்தை பார்வையிட்டு படம் வரைந்த போது நானும், செந்தில் என்பவரும் பார்வைமகசரில் கையொப்பம் செய்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு அணுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

மறுவிசாரணை – இல்லை.

Typed by Typist – E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.25 19:19:49 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.